நான்காவது

மரப்பெயர்த்தொகுதி.

சூத்திரம்.

(க)

சந்தாநந் தேவதாரந் தருச் கற்பக, மந்தாரம்பாரிசாதமவ ற்றின்வருக்கம்.

(உ) சூ.

சாந்தமலயஞ் சந்திர திலக, மேய்ந்தவாரஞ்சந்திவை சந்த நம்.

(ந) சூ.

அகருவும் பூழிலு மகிலென வறைவர், பகரிற்காகதுண்டமு மாகும்.

(ச) சூ.

சாலமராமரமாவேயாச்சா.

(ரு) சூ.

வகுளமிலஞ்சி மகிழ்மரமெ ன்ப.

(சா) சூ.

சாதிதேக்கே.

(எ) சூ.

சம்பகஞ்சண்பகம்.

(அ) சூ.

பூதவங்கான் மரம் வடமரந் தொன்மர, மோதியபழுமரங் கோளியாலே.

(கூ) சூ.

கணவம்பணையே மராமரம் போதி,யச்சுவத்தம்பிப்பிலமர [சே.

பி

பெயர்ப்பிரிவு.

தருவின்வருக்கமாவன.

சந்தாநம்-தேவ்தாரம்- கற் பகம்,மந்தாரம்-பாரிசாதம்

ஆ௳ ரு.

சந்தநத்தின்பெயர்.

சாந்தம்-மலயம்- சந்திாதில கம்-ஆரம்-சந்து. ஆ௳ ரு.

அகிலின்பெயர்.

அகரு-பூழில்-காகதுண்டம்.

ஆ௳ ௬.

ஆச்சாமரத்தின்பெயர்.

சாலம்-மராமரம்- ஆ.

ஆ௳ ந.

மகிழ்மரத்தின்பெயர்.

வகுளம்-இலஞ்சி. ஆ௳ உ.

தேக்கின்பெயர்.

சாதி. (க)

சண்பகத்தின்பெயர்.

சம்பகம் (க)

ஆலின்பெயர்.

பூதவம்-கான்மரம்- வடமர ம் - தொன்மரம் - பழுமரம்- கோளி. ஆ௳ சா.

ஆசின்பெயர்.

கணவம்-பணை- மராமரம்- போதி-அச்சுவத்தம்- பிப்பில ம். ஆ௳ சா.

பி

சூத்திரம்.

(ய)

பிண்டிசெயலை காகோளிய சோகு.

(யக) சூ.

இாத்தியிறலி.

(யஉ) சூ.

அருச்சுநமருதே.

(யந) சூ.

இதழிகடுக்கை யாரக்குவத ங்கொன்றை.

(யச) சூ.

கோட்டங் குடிலங்குராவெ னக்கூறுவர்.

(யரு) சூ.

சம்புநாவல்.

(யசா) சூ.

நிம்பம்வேம்பே.

(யஎ) சூ.

அதவுதும்பரமத்தியாகும்.

(யஅ) சூ.

ஆம்பிரஞ் சூத மாழை புளி மா.

(யகூ) சூ.

சூதஞ்சேதாரமாம்பிரங்கொ க்குத்,தீதின்மரத்திவை தேமா வாகும்.

(உய) சூ.

மதூகமிருப்பை யென வகு த்தனரே.

(உக) சூ.

பஞ்சரஞ்செங்கோடு செரு ந்தியாகும்.

து

பெயர்ப்பிரிவு.

அசோகின்பெயர்.

பிண்டி-செயலை-காகோளி.

ஆ௳ ந.

இாத்தியின்பெயர்.

இறலி. (க)

மருதின்பெயர்.

அருச்சுநம். (க)

கொன்றையின்பெயர்.

இதழி-கடுக்கை-ஆரக்குவதம்.

ஆ௳ ந.

குராவின்பெயர்.

கோட்டம்-குடிலம். ஆ௳ உ.

நாவலின்பெயர்.

சம்பு. (க)

வேம்பின்பெயர்.

நிம்பம். (க)

அத்தியின்பெயர்.

அத-உதும்பரம். ஆ௳ உ.

புளிமாவின்பெயர்.

ஆம்பிரம்-சூதம்-மாழை.

ஆ௳ ந.

தேமாவின்பெயர்.

சூதம்- சேதாரம் - ஆம்பிர ம்-கொக்கு. ஆ௳ ச.

இருப்பையின்பெயர்.

மதூகம். (க)

செருந்தியின்பெயர்.

பஞ்சரம்-செங்கோடு.

ஆ௳ உ.

து

சூத்திரம்.

(௨௨) ———

தருமோற்பலங் கன்னிகாரங்கோங்கே.

(௨௩) சூ.

பசும்பிடிதமாலம்பச்சிலையாகும்.

(௨௪) சூ.

கலிகஞ்சமியே குலிசம்வன்னி.

(௨௫) சூ.

கதிரங்கருங் காலி.

(௨௬) சூ.

காஞ்சிரையெட்டி.

(௨௭) சூ.

சிறுமாரோடஞ் செங்கருங்காலி.

(௨௮) சூ.

புன்னைபுந்நாகம்.

(௨௯) சூ.

வழைசுராபுன்னை.

(௩௰) சூ.

புன்கென் கிளவி புனமுருங்கைப்பெயர்.

(௩௧) சூ

ஆரோதாதகியாத்தியாகும்.

(௩௨) சூ.

திலகமஞ்சாடி.

(௩௩) சூ.

இலவம்பொங்கர்.

(௩௪) சூ.

ஆமலகநெல்லி.

(௩௫) சூ.

அரிதகிகடுமரம்.

பெயர்ப்பிரிவு.

கோங்கின்பெயர்.

தருமோற்பலம்- கன்னிகாரம். ஆ௨.

பச்சிலைமரத்தின்பெயர்.

பசும்பிடி-தமாலம். ஆ௨.

வன்னியின்பெயர்.

கலிகம்-சமி-குலிசம். ஆ௩.

கருங்காலியின்பெயர்.

கதிரம். (௧)

எட்டியின்பெயர்.

காஞ்சிரை. (௧)

செங்கருங்காலியின்பெயர்.

சிறுமாரோடம். (௧)

புன்னையின்பெயர்.

புந்நாகம். (௧)

சுராபுன்னையின்பெயர்.

வழை. (௧)

புனமுருங்கையின்பெயர்.

புன்கு. (௧)

ஆத்தியின்பெயர்.

ஆர்-தாதகி. ஆ௨.

மஞ்சாடிமரத்தின்பெயர்.

திலகம். (௧)

இலவமரத்தின்பெயர்.

பொங்கர். (௧)

நெல்லியின்பெயர்.

ஆமலகம். (௧)

கடுமரத்தின்பெயர்.

அரிதகி. (௧)

சூத்திரம்.

(௩௬) ———

சிந்தஞ் சிந்தூரஞ் சிறந்தவாம்பிரம், வந்ததிந் திருணி யெகினம்புளியே.

(௩௭) சூ.

குருந்துகுந்தம்.

(௩௮) சூ.

குடசம் வெட்பாலை.

(௩௯) சூ.

கூம்பல்கடம்பல்குமிழெனக்கூறுவர்.

(௪௰) சூ.

உடைகுடைவேலே.

(௪௧) சூ.

பாடலம்பாதிரி.

(௪௨) சூ.

கவிரேகிஞ்சுகமுருக்கெனக்கருதுவர்

(௪௩) சூ.

இல்லந்தேறும்.

(௪௪) சூ.

வெள்ளில்விளாவாம்.

(௪௫) சூ.

கூவிளம் வில்வமாலூரங்கூவிளை.

(௪௬) சூ.

திமிசுந்திமிலுங்கணியும் வேங்கை.

(௪௭) சூ.

கதம்பம்விசால நீபங் கடம்பே.

(௪௮) சூ.

மராவெண்கடம்பின் பெயராகும்மே.

பெயர்ப்பிரிவு.

புளியின்பெயர்.

சிந்தம்-சிந்தூரம் - ஆம்பிரம்-திந்திருணி-எகினம். ஆ௫.

குருந்தின்பெயர்.

குந்தம். (௧)

வெட்பாலையின்பெயர்.

குடசம். (௧)

குமிழின்பெயர்.

கூம்பல்-கடம்பல். ஆ௨.

குடைவேலின்பெயர்.

உடை. (௧)

பாதிரிமரத்தின்பெயர்.

பாடலம். (௧)

முருக்கின்பெயர்.

கவிர்-கிஞ்சுகம். ஆ௨.

தேற்றின்பெயர்.

இல்லம். (௧)

விளாவின்பெயர்.

வெள்ளில் (௧)

வில்வத்தின்பெயர்.

கூவிளம்-மாலூரம்-கூவிளை. ஆ௩.

வேங்கையின்பெயர்.

திமிசு-திமில்-கணி. ஆ௩.

கடம்பின்பெயர்.

கதம்பம்-விசாலம்-நீபம். ஆ௩.

வெண்கடம்பின்பெயர்.

மரா. (௧)

சூத்திரம்.

(௪௯) ———

பநசம்வருக்கை பலாவென
ப்பகர்வர்.

(௫௰) சூ.

ஆசினியிராப்பலாவாகும்மே.

(௫௧) சூ.

அழிஞ்சில்சேமர மங்கோல
மாகும்.

(௫௨) சூ.

மாதுளங்கழுமுண்மாதுளை
யாகும்.

(௫௩) சூ.

தாடிமந்தாது மாதுளை யெ
ன்ப.

(௫௪) சூ.

சம்பீர்முருகெலுமிச்சையா
கும்.

(௫௫) சூ.

நரந்தநார்த்தையாகுமென்
[ப.

(௫௬) சூ.

குருகேமாதவிகுருக்கத்தியா
கும்.

(௫௭) சூ.

அச்சங்கரீமுநியேயகத்தி.

(௫௮) சூ.

அருக்கமெருக்கே.

(௫௯) சூ.

களக்களாவே.

(௬௰) சூ.

இாத்திவதரியிலந்தையாகும்.

(௬௧) சூ.

காசைபூவைகாயாவாகும்.

பெயர்ப்பிரிவு.

பலாவின்பெயர்.

பநசம்-வருக்கை. ஆ௨.

இராப்பலாவின்பெயர்.

ஆசினி. (௧)

அழிஞ்சிலின்பெயர்.

சேமரம்-அங்கோலம்.

ஆ௨.

மாதுளையின்பெயர்.

மாதுளம்-கழுமுள். ஆ௨.

தாதுமாதுளையின்பெயர்.

தாடிமம். (௧)

எலுமிச்சையின்பெயர்.

சம்பீரம்-முருகு. ஆ௨.

நாரத்தையின்பெயர்.

நரந்தம். (௧)

குருக்கத்தியின்பெயர்.

குருகு-மாதவி. ஆ௨.

அகத்தியின்பெயர்.

அச்சம்-கரீரம்-முநி. ஆ௩.

எருக்கின்பெயர்.

அருக்கம். (௧)

களாவின்பெயர்.

களம். (௧)

இலந்தையின்பெயர்.

இரத்தி-வதரி. ஆ௨.

காயாவின்பெயர்.

காசை-பூவை. ஆ௨.

ந ந

ASIATIQUE

சூத்திரம்.

(௬௨) ———

நறவஞ்சுள்ளிநாகஞாழல்.

(௬௩) சூ.

நத்தமாலம்புன்கென நவில்
வர்.

(௬௪) சூ.

மரவந்துருக்கங் குங்குமமா
[கும்.

(௬௫) சூ.

* வச்சிராங்கங் கண்டூர்வத்
தொடு,வச்சிராஞ்சதாக்கள்ளிக்
குவைப்பர்.

(௬௬) சூ.

* நறவஞ்சுள்ளியருப்பலமனி
[ச்சம்.

(௬௭) சூ.

நுணவுதணக்கே.

(௬௮) சூ.

உலவையோடை.

(௬௯) சூ.

ஒடுவேயுடுப்பை.

(௭௰) சூ.

உன்னமுழிஞ்சில்.

(௭௧) சூ.

எகினஞ்சேமரமாண்மரமெ
ன்ப.

(௭௨) சூ.

கந்திபூகம்பூக்கங்கமுகே.

(௭௩) சூ.

பெண்ணை தாலம் புற்றாளி
போந்தை யென்,றெண்ணிய
நாமம்பனையெனவிசைப்பர்.

(௭௪) சூ.

போந்தையிளம்பனை யாக
[வும்புகல்வர்.

(௭௫) சூ.

நாளிகேரந்தெங்குதாழை
யெனநவில்வர். கா

பெயர்ப்பிரிவு.

ஞாழலின்பெயர்.

நறவம்-சுள்ளி-நாகம்.

ஆ௩.

புன்கின்பெயர்.

நத்தமாலம். (௧)

குங்குமமரத்தின்பெயர்.

மரவம்-துருக்கம். ஆ௨.

சதுரக்கள்ளியின்பெயர்.

வச்சிராங்கம் - கண்டூர்வம்-
வச்சிரம். ஆ௩.

அனிச்சத்தின்பெயர்.

நறவம்-சுள்ளி-அருப்பலம்.

தணக்கின்பெயர். [ஆ௩.

நுணவு. (௧)

ஓடையின்பெயர்.

உலவை. (௧)

ஒடுவின்பெயர்.

உடுப்பை. (௧)

உழிஞ்சிலின்பெயர்.

உன்னம். (௧)

சேமரத்தின்பெயர்.

எகினம்-ஆண்மரம். ஆ௨.

கமுகின்பெயர்.

கந்தி-பூகம்-பூக்கம். ஆ௩.

பனையின்பெயர்.

பெண்ணை-தாலம்-புல்- தா
ளி-போந்தை. ஆ௫.

இளம்பனையின்பெயர்.

போந்தை. (௧)

தெங்கின்பெயர்.

நாளிகேரம்-தாழை. ஆ௨.

கா

சூத்திரம்.

(எசு) ———

காம்புதிகிரிகண் வேழஞ்சந்தி, தூம்புமூளை வெதிர் விண்டுவேரன்,மூந் தூழ்தட்டை கீசகம் வேய்பணை, யம்புவரை வேணுக்கழையமையோங்கல், பாதிரிகிளையரிபாண்டிலுள்பட, வருபவைமூங்கிலென வகுத்தனரே.

(எஎ) சூ.

கழைவேழமிக்குக் கன்னல் கரும்பே.

(எஅ) சூ.

கண்டல்கேதகைமடிகைதைமுடங்கல்,வண்டமர்தாழையெனவகுத்தனரே.

(எகூ) சூ.

கதலியுமரம்பையும் வாழையாகும்.

(அய) சூ.

கோளிபூவாதுகாய்க்குங் குளிர்மரம்.

(அக) சூ.

சண்பகமும் வேங்கையும்வண்டுணுமலர்மரம்.

(அஉ) சூ.

பாதவந்தாருத்தருவே தாவர,மோதியமூலமரப்பொதுப் பெயரே.

(அங) சூ.

பொதும்பர்மரச்செறிவு.

(அச) சூ.

கோடரம்பொதும்பே.

பெயர்ப்பிரிவு.

மூங்கிலின்பெயர்.

காம்பு-திகிரி-கண்-வேழம்-சந்தி-தூமபு-மூளை - வெதிர்-விண்டு-வேரல்-மூந்தூழ்-தட்டை-கீசகம்-வேய்-பணை-அம்பு-வரை-வேணு-கழை-அமை-ஓங்கல்- பாதிரி- கிளை - அரி-பாண்டில். ஆ உரு.

கரும்பின்பெயர்.

கழை-வேழம்-இக்கு - கன்னல். ஆ ச.

தாழையின்பெயர்.

கண்டல்-கேதகை-மடி-கைதை-முடங்கல். ஆ ரு.

வாழையின்பெயர்.

கதலி-அரம்பை. ஆ உ.

பூவாதுகாய்க்குமரத்தின் பெயர்.

கோளி. (க)

வண்டுணுமலர்மரமாவன.

சண்பகம்-வேங்கை.

மரப்பொதுப்பெயர்.

பாதவம்-தாரு-தரு-தாவரம்-மூலம். ஆ ரு.

மரச்செறிவின்பெயர்.

பொதும்பர் (க)

மரப்பொதும்பின்பெயர்.

கோடரம். (க)

சூத்திரம்.

(அரு) ———

தேம் பொழின் மரக்காத் தோட்டந்துடவை,யுய்யாநஞ் சோலைவநமுத்தியாநந்,தண்டலைகாநமடவி பதினொன்று, மீண்டியநந்தநவநமெனவிசைப்பர்.

(அசு) சூ.

கடம்வியல்பழுவங்கட்சி குறும்பொறை, கடறுகாந்தாரமடவிகான்வநங், ககநங் காண்டங்கட்சிமுளரி,சுரமத்தமாரணியங் கானங்களரி, சிரணிபொச்சைவிடர்தில்லங்காடே.

(அஎ) சூ.

முதையிலையுதிர்வு பிறங்கிய முதுகாடே.

(அஅ) சூ.

பொச்சையுஞ் சுரமும் பொதிகரிகாடே.

(அகூ) சூ.

அாணிளை காவற்காடென வறைவர்.

(கூய) சூ.

ஒருமரமொருபெயருனாக்குங்கிளவி,வரைவிலவென்மனுர்வள்ளியோரே.

(கூக) சூ.

இறும்பேமிடை தூறு.

(கூஉ) சூ.

இண்டையீங்கை.

(கூங) சூ.

முண்டக முள்ளுடை மூலமென்ப.

பெயர்ப்பிரிவு.

நந்தநவநத்தின்பெயர்.

பொழில்-கா - தோட்டம்-துடவை-உய்யாநம் - சோலை-வநம்-உத்தியாநம்- தண்டலை-காநம்-அடவி. ஆ யக.

காட்டின்பெயர்.

கடம்-வியல்-பழுவம் - கட்சி-குறும் பொறை-கடறு-காந்தாரம்-அடவி-கான்- வநம்-ககநம்-காண்டம்- கட்சி-முளரி-சுரம்- அத்தம்- ஆரணியம்-கானம்-களரி-பொச்சை-விடர்-தில்லம். ஆ உங.

இலையுதிர்ந்தமுதுகாட்டின் பெயர்.

முதை. (க)

கரிகாட்டின்பெயர்.

பொச்சை-சுரம்-பொதி. ஆ ங.

காவற்காட்டின்பெயர்.

அரண்-இளை. ஆ உ.

ஒவ்வொருமரத்தினை யுணர்த்துமொவ்வொரு பெயர்களையுஞ் சொல்லப்புகினளவுபடாவென்பர்புலவர்.

தூற்றின்பெயர்.

இறும்பு. (க)

இண்டையின்பெயர்.

ஈங்கை. (க)

முள்ளுடைமூலத்தின்பெயர்.

முண்டகம். (க)

ஸூத்திரம்.

(௯௪) ——

கண்டகங்கடுவே முள்ளென
க்கருதுவர்.

(௯௫) ஸூ.

ஆசினிகரியேயரியேவைரஞ்,
சேகேமரத்தின்காழெனச்செ
(௯௬) ஸூ. [ப்புவர்.

வேத்திரஞ்சாதி சூரல் பிரம்
பே.

(௯௭) ஸூ.

அகக்காழ்வன்மர மாண்மர
மாகும், அவைகருங் காலி முத
லாயுள்ளன.

(௯௮) ஸூ.

புறக்காழ்வன்புல் பெண்மர
மாகும், அவைதாம்- தெரிக்கிற்
பனைகமுகுதெங்குமூங்கில்.

(௯௯) ஸூ.

முருக்குநார்பான்மரமுதலா
யின, வெளிறலிமரமெனும்வி
கற்பம்பெறுமே.

(௱) ஸூ.

அறலேபதுக்கை சிறுதூறு
(௱௧) ஸூ. [கும்.

புல்லுமரனும்புதலும் பூடும்,
வல்லியும்பெயர்க்கொடைமரு
ந்தெனப்படுமே.

(௱௨) ஸூ.

தைத்தவத்திரஞ்சத்திரந்தணி
க்கு, மெய்த்தநன்மருந்தேசல்
(௱௩) ஸூ. [லியகரணி.

துண்டமானவுறுப்புத் துணி
யிணைச், சந்துசெய்மருந்தேச
ந்தாநகரணி. வ

பெயர்ப்பிரிவு.

முள்ளின்பெயர்.
கண்டகம்-கடு. ஆ௨.

மரக்காழின்பெயர்.
ஆசினி-கரி - அரி - வைரம்-
சேகு. ஆ௫.

பிரம்பின்பெயர்.
வேத்திரம்-சாதி-சூரல்.
ஆ௩.

ஆண்மரத்தின்பெயர்.
அகக்காழ்-வன்மரம். ஆ௨.
அவையாவனகருங்காலிமுதலா
யுள்ளன.

பெண்மரத்தின்பெயர்.
புறக்காழ்-வன்புல். ஆ௨.
அவைபாவன- பனைகமுகுதெ
ங்குமூங்கிலாம்.

அலிமரத்தின்பெயர்.
வெளிறு. (௧)
அவ்வையாவனமுருக்கும்நாரு
ம்பாலுமுள்ளமரமுதலாயினவு
சிறுதூற்றின்பெயர். [மாம்.
அறல்-பதுக்கை. ஆ௨.
மருந்தெனும்பெயர்.
புல்-மரம்-புதல்-பூடு-வல்லி.
இவற்றிற்குரித்து.

அத்திரசத்திரந்தைத்தபுண்மா
ற்றுமருந்தின்பெயர்.
சல்லியகரணி. (௧)
துணிபட்டவுறுப்பிணைப்பொ
ருத்துமருந்தின்பெயர்.
சந்தாநகரணி. (௧)
வ

ஸூத்திரம்.

(௱௩) ——

விரணமுந்தழும்பு நீக்கிமெ
ய்யிணைத், தகைமை செய்மருந்
தேசமநியகரணி.

(௱௪) ஸூ.

உயிர்தருமருந்தே மிருதச
ஞ்சீவநி.

(௱௫) ஸூ.

பிள்ளைகுழவி கன்றுபோத்
தெனக், கொள்பமரமுதலிளை
மைப்பெயர்க்கொடை.

(௱௬) ஸூ.

நெல்லும்புல்லுநேராரான்
டே.

(௱௭) ஸூ.

பொங்கர்காம்புசாகையுறுப்
புக், கோடுபிறக்கஞ்சினைபணை
யுலவை, கொட்டரம்விடபந்தரு
மரக்கொம்பே.

(௱௮) ஸூ.

உலவை தழையே.

(௱௯) ஸூ.

வளாரிளங்கொம்பே.

(௱௰) ஸூ.

பத்திரமோலைபாசடை தண்
ணடை, சாகந்தமாலந்தழைபா
சிலையடை, பேசியபன்ன மிலை
யெனப்படுமே.

(௱௰௧) ஸூ.

வல்லரிகுழைமுறிமஞ்சரிகிச
லயம், பல்லவமலங்கல் கிளைதளி
ராகும். இ

பெயர்ப்பிரிவு.

விரணந்தழும்புகளை நீக்குமரு
ந்தின்பெயர்.
சமநியகரணி. (௧)

உயிர்தருமருந்தின் பெயர்.
மிருதசஞ்சீவநி. (௧)

மரமுதலிளைமையின் பெயர்.
பிள்ளை-குழவி-போத்து.
ஆ௩.

அவ்விளைமைப்பெயர்.
நெல்லும்புல்லும்பெறு.

மரக்கொம்பின்பெயர்.
பொங்கர்-காம்பு - சாகை-
உறுப்பு-கோடு-பிறக்கம் - சி
னை-பணை-உலவை-கோட்டரம்-
விடபம்-தரு. ஆ௰௨.
தழையின்பெயர்.
உலவை. (௧)
இளங்கொம்பின்பெயர்.
வளார். (௧)
இலையின்பெயர்.
பத்திரம்-ஓலை-பாசடை- த
ண்ணடை - சாகம் - தமாலம்-
தழை-பாசிலை-அடை - பன்ன
ம். ஆ௰.
தளிரின்பெயர்.
வல்லரி-குழை-முறி- மஞ்ச
ரி-கிசலயம்-பல்லவம்- அலங்க
ல்-கிளை. ஆ௮.
இ

சூத்திரம்.

(௱௰௨) ———
இலிர்த்தலுஞ் சிலிர்த்தலுங்
குழைத்தலுந்தளிர்த்தல்.

(௱௰௩) சூ.
முருந்தே முதலிற் செறிவெ
ண்குருத்தே.

(௱௰௪) சூ.
தொத்-துமிணருந் துணருமஞ்சரியுங், கொத்தின் பெயர்ச்
சியைக்கூறுங்கிளவி.

(௱௰௫) சூ.
பசுங்காய்திவிளி.

(௱௰௬) சூ.
பலங்கனிபழமே.

(௱௰௭) சூ.
பயினேபரலினுட் படுகுரு
த்தே.

(௱௰௮) சூ.
பிசினே ஆணிவெட்டுக் குரு
த்தே.

(௱௰௯) சூ.
வலம்புரிநந்தியாவர்த்தமா
கும்.

(௱௨௰) சூ.
கஞ்சங்குல்லைகஞ்சாவாகும்.

(௱௨௧) சூ.
சிந்துவாரநிர்க் குண்டிநொ
ச்சி.

(௱௨௨) சூ.
காந்தடோன்றிபற்றைகோட
லென், றைந்தநான்குங் காந்த
ளாகும்.

பெயர்ப்பிரிவு.

தளிர்த்தலின்பெயர்.
இலிர்த்தல் - சிலிர்த்தல் - குழைத்தல். ஆக ௩.

அடிவெண்குருத்தின் பெயர்.
முருந்து. (௧)

கொத்தின்பெயர்.
தொத்து-இணர்-துணர்-மஞ்சரி. ஆக ௪.

பசுங்காயின்பெயர்.
திவிளி. (௧)

பழத்தின்பெயர்.
பலம்-கனி. ஆக ௨.

பரலினுட்படுகுருத்தின்
பெயர்.
பயின். (௧)

வெட்டுக்குருத்தின்பெயர்.
பிசின்-ஆணி. ஆக ௨.

நந்தியாவர்த்தத்தின்பெயர்.
வலம்புரி. (௧)

கஞ்சாவின்பெயர்.
கஞ்சம்-குல்லை. ஆக ௨.

நொச்சியின்பெயர்.
சிந்துவாரம் - நிர்க்குண்டி-
ஆக ௨.

காந்தளின்பெயர்.
கார்ந்தள்-தோன்றி- பற்றை-
கோடல். ஆக ௪.

சூத்திரம்.

(௱௨௩) ———
காந்தடோன்றி பற்றை செ
ங்காந்தள்.

(௱௨௪) சூ.
வெண்காந்தள் செங்காந்த
ளென் றிருவிகற்பமுங், கொண்
டேவழங்குங் கோடைப்பெய
ரே.

(௱௨௫) சூ.
உந்மத்தமத்த மூமத்தைப்
பெயரே.

(௱௨௬) சூ.
எண்டமாமணக்கு.

(௱௨௭) சூ.
கோரண்டங்குறிஞ்சி.

(௱௨௮) சூ.
கர்வீரமலரிகணவீரமுமாம்.

(௱௨௯) சூ.
செச்சைசிந்தூரம் வெட்சி
யாகும்.

(௱௩௰) சூ.
உழிஞைசிறுபூளை யெனவு
ரைத்தனரே.

(௱௩௧) சூ.
பரியேபன்னல்கார்ப்பாசம்
பருத்தி.

(௱௩௨) சூ.
திப்பிலிகாமன்சிறுமூலகமே.

(௱௩௩) சூ.
துளசிகுல்லை துளபம்வநந்து
ழாய்.

(௱௩௪) சூ.
மரீசிகறியிவைமிளகெனவை
யபர்.

பெயர்ப்பிரிவு.

செங்காந்தளின்பெயர்.
கார்தள்-தோன்றி-பற்றை.
ஆக ௩.

கோடையென்னும்பெயர்.
செங்காந்தள்வெண்காந்தளீ
ண்டிங்கும்வழங்குவது.

ஊமத்தையின்பெயர்.
உந்மத்தம்-மத்தம். ஆக ௨.

ஆமணக்கின்பெயர்.
எண்டம். (௧)

குறிஞ்சியின்பெயர்.
கோரண்டம். (௧)

அலரியின்பெயர்.
கரவீரம்-கணவீரம். ஆக ௨.

வெட்சியின்பெயர்.
செச்சை-சிந்தூரம். ஆக ௨.

சிறுபூளையின்பெயர்.
உழிஞை. (௧)

பருத்தியின்பெயர்.
பரி - பன்னல் - கார்ப்பாச
ம். ஆக ௩.

திப்பிலியின்பெயர்.
காமன்-சிறுமூலகம். ஆக ௨.

துளசியின்பெயர்.
குல்லை-துளபம்- வநம் - து
ழாய். ஆக ௪.

மிளகின்பெயர்.
மரீசி-கறி. ஆக ௨.

சூத்திரம்.

(௱௩௫)

மஞ்சளரிசநம்.

(௱௩௬) சூ.

கந்தங்கருணை.

(௱௩௭) சூ.

சாசஞ்சிறுகிழங்காகுமென்
[ப.

(௱௩௮) சூ.

தகரந்தக்கோலங்கோட்டஞ்
சாதிக்கா, யிலவங்கமாஞ்சிகச்
சோல்மேலமெனப், பகரும்
வாசந்தருபண்டப்பெயரே.

(௱௩௯) சூ

* மூலகந்தம்மூதகத்தொடு,
வேரியிருவேலிவெட்டிவேரெ
[ன்ப.

(௱௪௰) சூ

* வேர்வாசமிலாமிச்சைமே
லாகும்மே.

(௱௪௧) சூ.

கடிப்பகையையவி கடுகின்
பெயரே.

(௱௪௨) சூ.

உருளரிசிகொத்துமலியெ
னவுரைப்பர்.

(௱௪௩) சூ.

கழங்கேழூழல்.

(௱௪௪) சூ.

கொடிக்கழலாகும்.

(௱௪௫) சூ.

பகன்றைகிலுகிலுப்பை.

(௱௪௬) சூ.

சகுடஞ்சேம்பே.

பெயர்ப்பிரிவு.

மஞ்சளின்பெயர்.

அரிசநம். (௧)

கருணையின்பெயர்.

கந்தம். (௧)

சிறுகிழங்கின்பெயர்.

சாசம். (௧)

வாசந்தருபலபண்டத்தின்
பெயர்.

தகரம்-தக்கோலம்-கோட்
டம்-சாதிக்காய்-இலவங்கம்-
மாஞ்சி-கச்சோலம்-ஏலம்.
ஆக அ.

வெட்டிவேரின்பெயர்.

மூலகந்தம்-மூதகம்-வேரி-
இருவேலி. ஆக ச.

இலாமிச்சையின்பெயர்.

வேர்-வாசம். ஆக உ.

கடுகின்பெயர்.

கடிப்பகை-ஐயவி. ஆக உ.

கொத்துமலியின்பெயர்.

உருளரிசி. (௧)

கழங்கு-அல்லது கழற்காயின்
மூழல். (௧) [பெயர்.

கழங்கின்கொடியின்பெயர்.

கழல். (௧)

கிலுகிலுப்பையின்பெயர்.

பகன்றை. (௧)

சேம்பின்பெயர்.

சகுடம். (௧)

சூத்திரம்.

(௱௪௭)

சில்லிசாகிநி சிறுகீரைப்பெ
யரே.

(௱௪௮) சூ.

*நந்தைகொத்தானாந்தையு
மாகும்.

(௱௪௯) சூ.

*பாயசம்பாற்சொற்றிபனச
முமாகும்.

(௱௫௰) சூ.

* குருவிந்தங்குஞ்சங்குன்றி
ப்பெயரே.

(௱௫௧) சூ.

* கோளிகொளிஞ்சி.

(௱௫௨) சூ.

*கரமஞ்சரிநாயுரீஇயென்ப.

(௱௫௩) சூ.

* இஞ்சிநறும்மருப்பல்லமெ
ன்ப.

(௱௫௪) சூ.

குமரிகற்றாழையாகக்கூறுவர்.

(௱௫௫) சூ.

வங்கம்பிருகதிவழுதுணைவழு
தலை.

(௱௫௬) சூ.

ஐவனமலைச்சாரல்விளைநெ
ல்லாகும்.

(௱௫௭) சூ.

நீவாரங்குளநெல்.

(௱௫௮) சூ.

சாலிசெய்ந்நெல்லே.

(௱௫௯) சூ.

செந்நெல்விரீகிசெஞ்சாலி
யாகும்.

பெயர்ப்பிரிவு.

சிறுகீரையின்பெயர்.

சில்லி-சாகிநி. ஆக உ.

கொத்தான்பெயர்.

நந்தை-நரந்தை. ஆக உ.

பாற்சொற்றியின்பெயர்.

பாயசம்-பனசம். ஆக உ.

குன்றியின்பெயர்.

குருவிந்தம்-குஞ்சம். ஆக உ.

கொளிஞ்சியின்பெயர்.

கோளி. (௧)

நாயுரீஇயின்பெயர்.

கரமஞ்சரி. (௧)

இஞ்சியின்பெயர்.

நறும்மருப்பு-அல்லம். ஆக உ.

கற்றாழையின்பெயர்.

குமரி. (௧)

வழுதலையின்பெயர்.

வங்கம்-பிருகதி-வழுதுணை.
ஆக ௩.

மலைச்சாரல்விளைநெல்லின்
பெயர்.

ஐவனம். (௧)

குளநெல்லின்பெயர்.

நீவாரம். (௧)

செய்ந்நெல்லின்பெயர்.

சாலி. (௧)

செந்நெல்லின்பெயர்.

விரீகி-செஞ்சாலி. ஆக உ.

சூத்திரம்.

(௱௬௰) ———

*சும்மைகுவால்போர்.

(௱௬௧) சூ

அரியே தண்டு லமரிசியாகு[ம்.

(௱௬௨) சூ.

இயவைதோரையெனும்வே யரிசி.

(௱௬௩) சூ.

சொன்னலுமிறுங்குஞ் சோளமாகும்.

(௱௬௪) சூ.

இறடிகருந்தினை.

(௱௬௫) சூ.

எனல்செந்தினை.

(௱௬௬) சூ.

*மாடமுழுந்தே.

(௱௬௭) சூ.

*ஆடகந்துவரை.

(௱௬௮) சூ.

*கூலமிதைகாராமணிக்கூற்றும்.

(௱௬௯) சூ.

*மஞ்சூங்கடலை.

(௱௭௰) சூ.

*முற்கம்பயறே.

(௱௭௧) சூ.

*கவலைபுல்செந்தினை கம்பாகும்மே.

(௱௭௨) சூ.

*கோதிகோதுமை.

(௱௭௩) சூ.

*குலுத்தங்காணங்கொள்ளாகும்மே.

வ

பெயர்ப்பிரிவு.

போரின்பெயர்.

சும்மை-குவால். ஆ ௨.

அரிசியின்பெயர்.

அரி-தண்டுலம். ஆ ௨.

வேயரிசியின்பெயர்.

இயவை-தோரை. ஆ ௨.

சோளத்தின்பெயர்.

சொன்னல்-இறுங்கு. ஆ ௨.

கருந்தினையின்பெயர்.

இறடி. (௧)

செந்தினையின்பெயர்.

எனல். (௧)

உழுந்தின்பெயர்.

மாடம். (௧)

துவரையின்பெயர்.

ஆடகம். (௧)

காராமணியின்பெயர்.

கூலம்-இதை. ஆ ௨.

கடலையின்பெயர்.

மஞ்சூம். (௧)

பயற்றின்பெயர்.

முற்கம். (௧)

கம்பின்பெயர்.

கவலை-புல்-செந்தினை ஆ ௩.

கோதுமையின்பெயர்.

கோதி. (௧)

கொள்ளின்பெயர்.

குலுத்தம்-காணம். ஆ ௨.

சூத்திரம்.

(௱௭௪) ———

*வரகுகோத்திரவம்.

(௱௭௫) சூ.

முதிரை யவரைதுவரை முதலாயின.

(௱௭௬) சூ.

பரல்காழ்வீசம்வித்துவிதையாம்.

(௱௭௭) சூ.

எண்ணுந்திலமுமெள்ளெனவிசைப்பர்.

(௱௭௮) சூ.

கவ்வையெள்ளிளங்காயாகும்மே.

(௱௭௯) சூ.

சூால்கதிராகும்.

(௱௮௰) சூ.

பதடிபதரே.

(௱௮௧) சூ.

இருவியுமருவியுந்தினைத்தாளாகும்.

(௱௮௨) சூ.

வையேபலாலம்வைக்கோலாகும்.

(௱௮௩) சூ.

வழுதி மொரோவழிவையும் பெறுமே.

(௱௮௪) சூ.

பொங்கழிதூற்றுநெற்கூடாகும்.

(௱௮௫) சூ.

பயிரேபசும்புல் பைங்கூழாகும்.

பு

பெயர்ப்பிரிவு.

வரகின்பெயர்.

கோத்திரவம். (௧)

அவரைதுவரைமுதலாயினவற்றின்பெயர்.

முதிரை. (௧)

விதையின்பெயர்.

பரல்-காழ்-வீசம்-வித்து. ஆ ௪.

எள்ளின்பெயர்.

எண்-திலம். ஆ ௨.

எள்ளிளங்காயின்பெயர்.

கவ்வை. (௧)

கதிரின்பெயர்.

சூால். (௧)

பதரின்பெயர்.

பதடி. (௧)

தினைத்தாளின்பெயர்.

இருவி-அருவி. ஆ ௨.

வைக்கோலின்பெயர்.

வை-பலாலம். ௨.

மற்றும்வைக்கோலின்பெயர்.

வழுதி. (௧)

ஆ ௩.

தூற்றுநெற்கூட்டின் பெயர்.

பொங்கழி. (௧)

பயிரின்பெயர்.

பசும்புல்-பைங்கூழ். ஆ ௨.

பு

சூத்திரம்.

(௱௮௬)

புதல்புல்லெனவருபுற்பிறப் பாகும்.

(௱௮௭) சூ.

*பதமுந் தூர்வையும் பச்சறுகாகும்.

(௱௮௮) சூ.

*சட்பமிளம்புல்.

(௱௮௯) சூ.

நாரிநெய்யரி தெங்கினூர்ப் பாளை.

(௱௯௰) சூ.

மூலங் கந்தங் கிழங்கென மொழிப.

(௱௯௧) சூ.

இலதையெனும்பெயர்கோற்கொடிக்கெய்தும்.

(௱௯௨) சூ.

கோற் கொடி மென் கொடி கொடியின்பிறப்பே.

(௱௯௩) சூ.

கற்பகஞ்சேர் கொடி காமவல்லி.

(௱௯௪) சூ.

வல்லியு நாழிலும் வள்ளியுங் கொடியே.

(௱௯௫) சூ.

மல்லிகைமௌவல்.

(௱௯௬) சூ.

மயிலையிருவாட்சி.

(௱௯௭) சூ.

மௌவலுந் தளவமுங் கற்பு முல்லை.

பி

பெயர்ப்பிரிவு.

புற்பிறப்பின்பெயர்.

புதல்-புல். ஆ ௨.

பச்சறுகின்பெயர்.

பதம்-தூர்வை. ஆ ௨.

இளம்புல்லின்பெயர்.

சட்பம். (௧)

தெங்கினூர்ப்பாளையின்பெயர்.

நாரி-நெய்யரி. ஆ ௨.

கிழங்கின்பெயர்.

மூலம்-கந்தம். ஆ ௨.

கோற்கொடியின்பெயர்.

இலதை. (௧)

கொடிப்பிறப்பின்பெயர்.

கோற்கொடி-மென்கொடி. ஆ ௨.

கற்பகஞ்சேர்கொடியின் பெயர்.

காமவல்லி. (௧)

கொடியின்பெயர்.

வல்லி-நாழில்-வள்ளி. ஆ ௩.

மல்லிகையின்பெயர்.

மௌவல். (௧)

இருவாட்சியின்பெயர்.

மயிலை. (௧)

முல்லையின்பெயர்.

மௌவல்-தளவம்-கற்பு. ஆ ௩.

பி

சூத்திரம்.

(௱௯௮)

பித்திகைசாதி கருமுகைமூன்றும் மொத்தசிறு சண்பகமாகும்மே.

(௱௯௯) சூ.

மாலதிமௌவலாகுமென்ப.

(௨௱) சூ.

மாலதிசிறுசண்பகமுமாகு [ம்.

(௨௱௧) சூ.

*தமநகமருக்கொழுந்து.

(௨௱௨) சூ.

துடிகூதாளங்கூதாளியென [ப.

(௨௱௩) சூ.

விம்பமுந்தொண்டையுங் கொவ்வைப்பெயரே.

(௨௱௪) சூ.

*வல்லிநாளிகம்.

(௨௱௫) சூ.

*கன்னிகிகிணிகருவிளைகாக் கணம்.

(௨௱௬) சூ.

*மதுரசங்கோத்தநிகைமுந் திரிகையாகும்.

(௨௱௭) சூ.

*குளவிமலைப்பச்சை.

(௨௱௮) சூ.

குண்டலிமுத்தாபலமிசங்கெனக்கூறுவர்.

(௨௱௯) சூ.

*சடைதூர்சிவைவேர்.

அ

பெயர்ப்பிரிவு.

சிறுசண்பகத்தின்பெயர்.

பித்திகை-சாதி-கருமுகை. ஆ ௩.

மௌவலின்பெயர்.

மாலதி. (௧)

மாலதியென்னும்பெயர் சிறுசண்பகத்திற்குமுரித்து.

மருக்கொழுந்தின்பெயர்.

தமநகம். (௧)

கூதாளியின்பெயர்.

துடி-கூதாளம். ஆ ௨.

கொவ்வையின்பெயர்.

விம்பம்-தொண்டை. ஆ ௨.

வல்லியின்பெயர்.

நாளிகம். (௧)

காக்கணத்தின்பெயர்.

கன்னி-கிகிணி-கருவிளை. ஆ ௩.

முந்திரிகையின்பெயர்.

மதுரசம்-கோத்தநிகை. ஆ ௨.

மலைப்பச்சையின்பெயர்.

குளவி. (௧)

இசங்கின்பெயர்.

குண்டலி-முத்தாபலம். ஆ ௨.

வேரின்பெயர்.

சடை-தூர்-சிவை. ஆ ௩.

அ

சூத்திரம்.

(உ௱௰) ———

அடம்புசோபாலிகை.

(உ௱௰௧) சூ.

அதில்விரிதூறு.

(உ௱௰௨) சூ.

பிரம்பிரக்கு.

(உ௱௰௩) சூ.

*பெரும்பிரக்குப்படலிகை.

(உ௱௰௪) சூ.

கூலம்பாகல்.

(உ௱௰௫) சூ.

சிவேதைபகன்றை.

(உ௱௰௬) சூ.

அமுதவல்லிசீந்தில்.

(உ௱௰௭) சூ.

கண்டூரங்காஞ்சொறி.

(உ௱௰௮) சூ.

பஞ்சிகந்தாளி.

(உ௱௰௯) சூ.

பகன்றைநறையாவென்னவு ம்பகர்வர்.

(உ௱உ௰) சூ.

நாகவல்லிதாம்பூலம்வெற்றி லை.

(உ௱உக) சூ.

வச்சிரவல்லிபிரண்டையாகு [ம்.

(உஉஉ) சூ.

நீலியவுரி.

(உஉ௩) சூ.

குறிஞ்சிசகசரி.

(உஉ௪) சூ.

துரோணந் தும்பையாகச் சொல்லுவர்.

பெயர்ப்பிரிவு.

அடம்பின்பெயர்.

சோபாலிகை. (க)

விரிதூற்றின்பெயர்.

அதில். (க)

பிரக்கின்பெயர்.

பிரம். (க)

பெரும்பிரக்கின்பெயர்.

படலிகை. (க)

பாகலின்பெயர்.

கூலம். (க)

சிவேதையின்பெயர்.

பகன்றை. (க)

சீந்திலின்பெயர்.

அமுதவல்லி. (க)

காஞ்சொறியின்பெயர்.

கண்டூரம். (க)

தாளியின்பெயர்.

பஞ்சிகம். (க)

நறையாவின்பெயர்.

பகன்றை. (க)

வெற்றிலையின்பெயர்.

நாகவல்லி-தாம்பூலம். ஆ உ.

பிரண்டையின்பெயர்.

வச்சிரவல்லி. (க)

அவுரியின்பெயர்.

நீலி. (க)

குறிஞ்சியின்பெயர்.

சகசரி. (க)

தும்பையின்பெயர்.

திரோணம். (க)

சூத்திரம்.

(உஉ௫) ———

குசையேதருப்பையென்ன க்கூறுவர்.

(உஉ௬) சூ.

ஏருவைபஞ்சாய்க்கோரையெ [ன்ப.

(உஉ௭) சூ.

செருந்திவாட்கோரை.

(உஉ௮) சூ.

காசைநாணல்.

(உஉ௯) சூ.

*விரணம்விழற்புல்.

(உ௩௰) சூ.

புற்கொடிமென்பூச்சுரை யெனப்புகல்வர்.

(உ௩௧) சூ.

நீர்முள்ளிமுண்டகமாகுமெ ன்ப.

(உ௩௨) சூ.

நாரஞ்செவிரம் பதிகஞ்சை வலம், பாசியென்றுபகரப்படு மே.

(உ௩௩) சூ.

கல்காரநீர்க்குளிரியென்ப.

(உ௩௪) சூ.

புண்டரீகம்பதுமநளிநஞ் சரோருகமுண்டகமம்போரு கமரவிந்தம், பங்கயமம்புயம் வாரிசஞ்சலசங், கஞ்சம்வநசங் கோகநதங்கமல, முளரிநீரோ ருகந்திருமால்கொப்பூழ், திரு மலரிண்டை சதபத்திரியென, வருமவைதாமரைவண்பெயரா கும்.

பெயர்ப்பிரிவு.

தருப்பையின்பெயர்.

குசை. (க)

பஞ்சாய்க்கோரையின்பெயர்.

ஏருவை. (க)

வாட்கோரையின்பெயர்.

செருந்தி. (க)

நாணலின்பெயர்.

காசை. (க)

விழற்புல்லின்பெயர்.

விரணம். (க)

சுரையின்பெயர்.

புற்கொடி. (க)

நீர்முள்ளியின்பெயர்.

முண்டகம். (க)

பாசியின்பெயர்.

நாரம்-செவிரம் - பதிகம்- சைவலம். ஆ ச.

நீர்க்குளிரியின்பெயர்.

கல்காரம். (க)

தாமரையின்பெயர்.

புண்டரீகம்-பதுமம்-நளிந ம்-சரோருகம்-முண்டகம்-அ ம்போருகம்-அரவிந்தம்-பங் கயம்-அம்புயம்-வாரிசம்-சல சம்-கஞ்சம்-வநசம்-கோகந தம்-கமலம்-முளரி- நீரோருக ம்-திருமால்கொப்பூழ் - திரு மலர்- இண்டை-சதபத்திரி. ஆ உக.

சூத்திரம்.

(௨௬௫) ——

*வராடகந்தாமரைக் காயெனவகுப்பர்.

(௨௬௬) சூ.

*சுருள்விசிவளயம்.

(௨௬௭) சூ.

உற்பலங்குவலயங் கழுநீர் குவளை.

(௨௬௮) சூ.

நீலோற்பலமிந்தீவரங்குவலய, நீலம்பானல் காவிகருங்குவளை, கல்லாரமுமெனக்கழறலா [கும்

(௨௬௯) சூ.

செங்குவளையரத்த முற்பலஞ் செங்கழுநீர்.

(௨௭௦) சூ.

குவலயநெய்தலாகவுங்கூறு [வர்.

(௨௭௧) சூ.

கைரவஞ்செவ்வல்லிசெவ்வாம்பலாகும்.

(௨௭௨) சூ.

வெள்ளாம்பல்சேதாம்பலென்றிருவிகற்பமுங், கொள்ளமன்றேகுமுதப்பெயர்க்கொ [டை.

(௨௭௩) சூ.

ஆம்பலுநெய்தலுமல்லியுங்குமுதம்.

(௨௭௪) சூ.

அல்லியகவிதழ்.

(௨௭௫) சூ.

புல்லிபுறவிதழ்.] பொ

பெயர்ப்பிரிவு.

தாமரைக்காயின்பெயர்.

வராடகம். (௧)

தாமரைச்சுருளின்பெயர்.

விசி-வளயம். ஆ. ௨.

குவளைப்பொதுப்பெயர்.

உற்பலம்-குவலயம்-கழுநீர். ஆ. ௩.

+கருங்குவளையின்பெயர்.

நீலோற்பலம் - இந்தீவரம் - குவலயம் - நீலம் - பானல் - காவி - கல்லாரம். ஆ. ௭.

செங்குவளையின்பெயர்.

ஆரத்தம் - உற்பலம் - செங்கழுநீர். ஆ. ௩.

குவலயமென்னும்பெயர்.

நெய்தற்குமுரித்து.

செவ்வாம்பலின்பெயர்.

கைரவம்-செவ்வல்லி. ஆ. ௨.

குமுதமென்னும்பெயர்.

வெள்ளாம்பற்குஞ் செவ்வாம்பற்குமுரித்து.

+குமுதத்தின்பெயர்.

ஆம்பல்-நெய்தல்- அல்லி- ஆ. ௩.

அகவிதழின்பெயர்.

அல்லி. (௧)

புறவிதழின்பெயர்.

புல்லி. (௧)] பொ

+ பிங்கலந்தைமுதலியவற்றில் கருங்குவளையைக் கருநெய்தலெனவும், குமுதத்தைவெண்ணெய்தலெனவுங்கூறுவர்.

சூத்திரம்.

(௨௭௬) ——

பொகுட்டேகன்னிகைப்பூவினுட்கொட்டை.

(௨௭௭) சூ.

கோட்டுப்பூக்கொடிப்பூநீர்ப்பூநிலப்பூத், தோற்றமுடையபூவின்றொடர்பே.

(௨௭௮) சூ.

முகைநனைகலிகை முகிழ் சினைகோரக, +நகைகன்னிகைபோகிலரும்புமொட்டே.

(௨௭௯) சூ.

அலர்தாரலரிபோதுவீ துணர், மலரோடிணரிவை மலர்த்தபூவே.

(௨௮௦) சூ.

துணரேமஞ்சரிவல்லரிதொத்தோ, டிணரேகுலையிவைபூங்கொத்தென்ப.

(௨௮௧) சூ.

நல்லிசையம்பற் செல்வச்சேந்தனில், வரைவில்கல்வியிற் படையிற்கொடையில், வெல்லுநரணிவாகைவெற்றிப்பூவே.

(௨௮௨) சூ.

செம்மல்பழம்பூ வாகச்செப்புவர்.

(௨௮௩) சூ.

மகரந்தங்கேசரங் கொங்குமலர்த்தாதே.

(௨௮௪) சூ.

எடுந்தோடும்பூவினிதழே.

தொ

பெயர்ப்பிரிவு

பூவினுட்கொட்டையின் பெயர்.

பொகுட்டு-கன்னிகை. ஆ. ௨.

பூவின்வகையாவன

கோட்டுப்பூ-கொடிப்பூ-நீர்ப்பூ-நிலப்பூ. ஆ. ௪.

மொட்டின்பெயர்.

முகை-நனை-கலிகை-முகிழ்-சினை-கோரகம்-நகை-கன்னிகை-போகில்-அரும்பு. ஆ. ௰.

பூவின்பெயர்.

அலர்-தார்-அலரி-போது-வீ-துணர்-மலர்-இணர். ஆ. ௮.

பூங்கொத்தின்பெயர்.

துணர் - மஞ்சரி - வல்லரி - தொத்து-இணர்-குலை. ஆ. ௬.

வரம்பில்லாத கல்வியிலும் படையிலுங் கொடையிலும்பிறரை வெல்லுநரணியும் வெற்றிப்பூவின்பெயர்.

வாகை. (௧)

பழைம்பூவின்பெயர்.

செம்மல். (௧)

மலர்த்தாதின்பெயர்.

மகரந்தம்-கேசரம் - கொங்கு. ஆ. ௩.

பூவிதழின்பெயர்.

எடு-தோடு. ஆ. ௨.

தொ.

+ நகையென்பது-அடைமொழியெனக்கொளினுமமையும்.

சூத்திரம்.

(௨௫௫)

தொடையல்வாசிகை சிகழி
கைகோதை,படலையலங்கல்கத்
திகைபிணைய,லணியல்சுருக்கை
தொடைலதாமந், தொங்கறெரி
யல்கண்ணிதார்சூட்டு, மஞ்சரி
யொலியலிலம்பகமாலை.

(௨௫௬) சூ.

*பிணையல்பின்னியமாலைப்
பெயரே.

(௨௫௭) சூ.

சூட்டுடனிலம் பகநுதலணி
மாலை.

(௨௫அ) சூ.

மாலைசிகழிகைவாசிகைதொ
டைய, லாகுமென்பவறிந்திசி
னோரே.

பெயர்ப்பிரிவு.

மாலையின்பெயர்.

தொடையல்-வாசிகை-சிக
ழிகை-கோதை-படலை- அலங்
கல்-கத்திகை-பிணையல்-அணி
யல்-சுருக்கை-தொடலை- தாம
ம்-தொங்கல் - தெரியல்-கண்
ணி-தார்-சூட்டு-மஞ்சரி- ஒலி
யல் இலம்பகம். ஆ உ௰.

பின்னியமாலையின்பெயர்.

பிணையல். (க)

நுதலணிமாலையின்பெயர்.

சூட்டு-இலம்பகம். ஆ உ.

வாசிகையின்பெயர்.

மாலை- சிகழிகை - தொடை
யல். ஆ ௩.

நாடேபிறர் நாட்டிற்குவமையாறே, காலமறிந்துதவுங்
காவிரிதானே,யாடவர்திலகனம்பன்மன்ன,னீடிசைத்தலை
வனருவந்தைச்சேந்த, ஞய்ந்ததிவாகரத் தரும்பொருள்
விளக்கு, நான்காவதுமரப்பெயர்த்தொகுதி
முற்றிற்று.

ஐந்தாவது

இடப்பெயர்த்தொகுதி.

சூத்திரம்.

(க)

*அமுதங்கேவலமபவருக்கம்
வீடு, சிவங்கைவல்லியஞ் சித்தி
மீளாக்கதி,பரகதியோடுமுத்தி
பஞ்சமகதி, நிர்வாண மோக்க
மெனநிகழ்த்தினரே.

(௨) சூ

தாநந் துறக்கம் பொன்னுல
கும்பர்,வானகமமருலகுயர் நி
லைப்புத்தேள்,வியனுலகுவிசும்பு
விண்ணுலகுநாகம், பவநமாசு
வர்க்கந்தெய்வலோகப்பெய
ரே.

(௩) சூ.

*பவநநாகலோகப்பாலதா
ம்.

(௪) சூ.

சேணியுஞ்சேடியும்விஞ்சை
யர்சேர்விடம்.

(௫) சூ.

மாதிரமாசைவம்பதிசைப்
பெயர்.

(௬) சூ.

கருபமிசைபுலந்தேந்திக்கரித
ம், விசும்புமுலகுங் கோக்காட்
டையுமாம்.

(௭) சூ.

குணக்கேபூருவமிந்திரிபிரா
சி,கிழக்குக்கீழ்த்திசை கிளக்கு
ங்காலே.

பெயர்ப்பிரிவு.

மோக்கத்தின்பெயர்.

அமுதம்-கேவலம்- அபவரு
க்கம்-வீடு-சிவம்- கைவல்லிய
ம்-சித்தி- மீளாக்கதி- பரகதி-
முத்தி - பஞ்சமகதி - நிர்வாண
ம். ஆ க௨.

தெய்வலோகத்தின்பெயர்.

தாநம்- துறக்கம்- பொன்னுல
கு- உம்பர்- வானகம்- அமருல
கு - உயர்நிலை - புத்தேளுலகு-
விசும்பு-விண்ணுலகு- நாகம்-
பவநம்-சுவர்க்கம். ஆ க௩.

நாகலோகத்தின்பெயர்.

பவநம். (க)

விஞ்சையருலகத்தின்பெயர்.

சேணி-சேடி. ஆ உ.

திசையின்பெயர்.

மாதிரம்-ஆசை-வம்பல். ௩.

மற்றுந்திசையின்பெயர்.

கருபம்- மிசை- புலம்- தே
ம்-திக்கு-அரிதம்- விசும்பு-உ
லகு-கோ-காட்டை. ௰

ஆ ௰௩.

கீழ்த்திசையின்பெயர்.

குணக்கு-பூருவம் - இந்திரி-
பிராசி - கிழக்கு. ஆ ௫.